183517

திருப்புகழ்
காவடிச் சிந்து

Q26:38-2112TR
N22.
183517

துணை.

திருத்தணிகை

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி

# திருப்புகழ் காவடிச்சிந்து.



13 FEB 19

இஃது

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிரமாடிக்கம்பனி

உபாத்தியாயர் மஹாவித்வான்

வேலூர் நாராயணசாமி பிள்ளை

அவர்களாலியற்றி

நுங்கம்பாக்கம்

அரங்கநாத முதலியாரவர்களால்

சென்னை ரூபி

பெரியநாயகி யம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

[அணா 2

ஸ்டர்ட் காபிரைட்

1922

26:38.2112 TR
1N22
183517

யா… …நிதியில்லாத நய…

மிகவும் கீர்த்… …றுள்ள கண்ணுக்கிடும் … …மை.

இது அனேக… …மான மூலிகைகளைக்கொ… …பெரியோர்களின் சாஸ்திரவிதிப்படி செய்… …டித்து அநேக ஆண்டுகள… …கையாணடு வரும் ஓர்வித அற்புதமான மை. இது மற்றவைகளைப்போலல்லாது கண்ணில் ஏற்படும் சகலவிதமான துன்பங்களைப்போக்கி, மூளைக்கு பலத்தையும், ஞாபகசக்தியையும், கண்ணுக்கும், கபாலத்திற்கும் குளிர்ச்சியையும் தரும்

இதனால் கண்கூச்சம், நீர்வடிதல், கண்ணில் பூவிழுதல் கண்சிகப்பு, கண் எரிச்சல், கண்மங்கல், கிருகிருப்பு, ஒற்றைத்தலைநோய், மண்டைக்குடைச்சல் முதலியவை போக்கும் கண் சாலேசரத்தினால் கஷ்டப்படும் பாலியரும், வயோதிகரும் இதை உபயோகித்துவந்தால் கண்ணுக்காக அணியும் கண்ணாடியையும் விலக்கப்படலாம்.

அநேகமாய் எல்லாசிறுவர்களும், ஸ்திரீபுருஷாள் முதலிய யாவரும் இதை உபயோகித்து வருவார்களாயின் இதன் குணம் நன்றாய் விளங்கும்,

டப்பி 1-க்கு ரூபா 1 0 0
தபால் சார்ஜ் அணா 0 5 0

நு. அரங்கநாத முதலியார்·
சாமிபிள்ளை வீதி,
சூளைபோஸ்ட், வேப்பேரி மதராஸ்,

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பெனி.,
உபாத்தியாயராகிய இந்நூலாசிரியராலியற்றிய

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ ராமலீலா (சம்பூர்ண ராமாயணம்) | ... | 0 | 6 | 0 |
| ஸ்ரீ கிருஷ்ண லீலா | ... | 0 | 4 | 0 |
| பார்ஸி சரஸ பூஷணன் சரித்திரம் | ... | 0 | 4 | 0 |
| கோவலன் கண்ணகி முதற்பாகம் 2-ம் பாகம் பிரதி 1-க்கு | ... | 0 | 4 | 0 |
| கோவிலன் சரித்திரம் (நூதனமாயியற்றிய டிராமா) முதற்பாகம் 2-ம் பாகம் பிரதி 1-க்கு | ... | 0 | 4 | 0 |
| பார்ஸி அதிரூப அமராவதி | ... | 0 | 6 | 0 |
| ராஜா கோபி சந்த் நாடகம் (கிளேஸ்) | ... | 0 | 8 | 0 |
| திருத்தணிகை ஸ்ரீ சிவ சுப்ரமண்யர் திருப்புகழ் காவடிச்சிந்து | ... | 0 | 2 | 0 |
| பார்ஸி இந்துஸ்தான் பஜனை கீர்த்தனை | ... | 0 | 4 | 0 |
| மீன் பாட்டு | ... | 0 | 1 | 0 |
| திருடன் பாட்டு முதற்பாகம் | ... | 0 | 2 | 0 |
| ஷை 2-ம் பாகம் | ... | 0 | 2 | 0 |
| பயாஸ்கோபில் கண்ணுரும் கிருஷ்ண மாயை திருப்புகழ் காவடிச்சிந்து | | 0 | 2 | 0 |

வே. நாராயணசாமி பிள்ளை,
உபாத்தியாயர்
நெ. 29, வெங்கிடருமையர் தெருவு,
மின்ட் போஸ்ட் மதராஸ்

894.811
2637

உ

வெற்றிவேலுற்ற துணை.

திருத்தணிகை

# ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி

# திருப்புகழ் காவடிச்சிந்து.

இஃது

சிலோன் சாயபு டிராமாடிக் கம்பேனியிலும்

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பேனி

உபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ மஹாவித்வான்

## வேலூர் - நாராயணசாமி பிள்ளை

அவர்களா லியற்றப்பட்டு

நுங்கம்பாக்கம்

## அரங்கநாத முதலியாரவர்களால்

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

13 FEB 12
026:88'2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
183517

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.] [இதன் விலை அணா 2

உ

வெற்றிவேலுற்ற துணை.

சிலோன் சாயபு டிராமாடிக் கம்பெனி

ஆலந்தூர் ஒரிஜனல் டிராமாடிக் கம்பெனி உபாத்தியாயர்

வேலூர் - நாராயணசாமிபிள்ளை அவர்களாற் பாடிய

திருத்தணிகை

ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி

# திருப்புகழ் காவடி சிந்து.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

திருத்தணிகை வாழும் சிவசுப்ர மணியர்மேல்
பொருத்த மாய்ப்பாடி போற்றினேன்—கருத்தொளிரும்
அம்பிகையின் பாலா ஆதிகஜ மாமுகனே
நம்பினேன் எப்போதும் நான்.

## விநாயகர் துதி.

1. தரு.

(கணநாதா கார்த்தருள்.)

| | | | |
|---|---|---|---|
| பார்வதி பாலா | கஜமுக | பா | |
| பாலனைக்கார் ஞாலமீது | நலமருள் | | பா |
| தீர்ப்பாயே வினை | கஜமுகா | தீ | |
| தினநாதா மோனவேதா | நலமருள் | | பா |
| லம்போ தராயா | கஜமுகா | ல | |
| சம்ப்ரம அம்பிகை பாலா | நலமருள் | | பா |
| மோதக ஹஸ்தா | கஜமுகா | மோ | |
| மோனரூபா ஞானதீபா | நலமருள் | | பா |
| ஆறுவமுதே | பிரணவா | ஆ | |
| நாராயணசாமி துதி | நலமருள் | | பா |

## சரஸ்வதி துதி.

### 2. தரு.

(ஐ திலதாரியாயி)

காயத்ரி காத்தருள்வாய் கா

நாயகி பிரம்ம புத்ரி
ஞானேஸ்வரி சாவித்ரி
நாமகளே ஞானமருள்
நான் பணிந்தேனே செந்தேனே கா

தண்டா மரைக் கிழத்தி
வெண்டா மரைச் சுழுத்தி
அண்டிநின்ற அடியேனை
ஆதரிப்பாயே என்தாயே கா

வாணியே மரக தாங்கி
ஆணிமுத்தே கன காங்கி
பாணியே பாலனைக் காரும்
பாதம் பணிந்தேன் அணிந்தேன் கா

நாராயண சாமி துதி
ஆருவமுதே என் பதி
பேரானந்த வாரிதியே
பேதையைக் காரும் கண்பாரும் கா

## பரமசிவம் துதி.

### 3. தரு.

(கலிலோஹரி ஸ்மரணமு)

பரமே எனை யாதரிப் பாயே
பரம்பொருள பசுபதியே
தயா நிதியே ப

வரமே நீ தருகுவாய் ஈசா
வடமாலி கைலாசா
வாரும் மயேசா ப

சிவமே சுட ரோங்கிய பொருளே
[illegible] சிற்சுக மெனக் [illegible] கருளே
[illegible] திர்த் திருளே-சிவமே
தவயோ கியர் சாற்றும் விநோதா
பவமதைத் தீர் வேதா
ப்ரக் யாதா ப
நாரா யண சாமி சொரூபா
நல்மருள் சுப்ர தீபா
ஞான பூபா-சிவமே
தீரா யிடர் யாவையும் போக்கி
தீவினையதை நீக்கி
அடிக்கா ளாக்கி ப



## சுப்பிரமணியர் துதி

(மலடிவயிற்று)

மரகத மயின்மீ தேறியே
வருகுவா யானந்த வாரியே
குருவே எனக்கருள் கோரியே பரமேசா
ஹரஹரசங் கரனே மஹா தேவா
ஆதரித் தெனக்கு மறை தாவா
ஐயனே எந்தன் மஹானு பாவா ஸ்ரீகைலாசா

சச்சிதா னந்த சைதன்ய ஈசா
சத்துசித் தானந்த பர மேசா
சரண மதுபுரிந்தேன் காரும்ப்ர காசா ஜெகதீசா
நாரா யணசாமி நாதாவை போகா
ஞானசஞ் சீவியே கனத் யாகா
நலமுட னடிபணிந் தேனேசாத் வீகா சுரநேசா

## 5. தரு.

(அச்சாமோரி லாகீச)

பச்சைமயில் மீதேறி
பாலன் முன் வருவாயே
வருவாயே அருள் தருவாயே ப

சச்சிதா னந்த நாதா
சாயுஜ்ய மெனக்கு தாதா
சாமியே காமியே
பூமிபுகழ் நேமியே ப

குஞ்சரி வள்ளிமகிழ்
குழந்தை வடி வேலனே
குமரேசா அமரீசா
சமராபுரி விலாசா ப

சரவணபவ சிவனே
சைதன்யமா தவனே
தற்காரும் விற்போரும்
சிற்பரனே கண்பாரும் ப

மாங்கனிக் காக வலம்
வந்திட்ட காருண் யனே
மணியேதாள் பணிந்தேனே
குணமுடன்சார் கந்தனே ப

நாராயண சாமி துதி
நாதா ஞான வாரிதி
நான் பணிந்தேன் குகா
வாண்புகழும் குமரேசா ப

## 6. தரு.

(பங்கரி மோரி)

சங்கரி பாலா சரவண சீலா
தாரும் ஞானமே ச
கங்கா தரனிட பங்கஜ நேத்ரா
மங்கையின் வள்ளி பாகனே
இங்கெனை யாளும் மோகனே ச

குமர குருவே குழந்தை வேலா
குக நமசி வாயா
குறையைத் தீர் சகாயா ச

வள்ளி குஞ்சரி மகிழும் சீலா
வடிவேலா கௌரி பாலா
வந்தனம் சு சீலா
நாரா யணசாமி நாயகனே கார்
ஞான மருளவே கண் பார்
நலந் தருவாய் கந்தா ச

## 7. தரு.

(ஐலே நாலே நாலே)

வடி வேலா வேலா
வர்ண மயி லேறி
வந்திடுவாய் குமரா வ

ஆலகால முண்ட தேவன்
அருளைப் பெற்ற கந்தனே
ஞாலமீது சீலனே கார்
பாலனென்னை நீ கண்பார்
மாங்கனிக் காய் வலமேவந்த
வள்ளிகுஞ்சரிக் குகந்த
வதன ரூபா
மதன ரூபா
சுதன்ப்ர தாபா வந்தனம் வ

சூரபத்மப்பேரை வதைத்த
காரண குருவர்ச் சித்த
கந்த நாதா
எந்தன் வேதா
மைந்தன் பர போதா வந்தனம் வ

நாராயண சாமி துதி
ஞான தேவா மாகிதி
நாதா வாராய்
வேதைத் திராய்
பாதந் தாராய் வந்தனம் வ

## 8. தரு.

(ஜோதார்ச)

வேலாயுதா வந்தனம்
வேண்டி தந்தேன் கந்தனே வே

சூலபாணி யீன்ற புத்திரா
சுரர்கள் துதிக்கும் தமக்கு மித்திரா வே
சூரபத்மன் முதலான ஜேரை
துரத்திக் கொன்றுமேநற் பேரை
சுகமா யெடுத்தாய் மிகவும் கொடுத்தாய்
ஜெகமீ தடுத்தாய் சிவத்தை யடுத்தாய் வே

குமர குரு பரனே
குழந்தையின் சுப கரனே
தமதடிகளை நான் பணிந்தேன்
உமை சங்கரி உலாவ அணிந்தேன் வே

குஞ்சரியின் வள்ளி பாகா
கூர்வே லாயுதா வி சாகா
சஞ்சலந் தீர்த்தருள சிவ மைந்தா
தற்காரும் எந்தனை ஸ்ரீ கந்தா வே

வீரவாகு தேவ ராதி
யோருப பணிந்திடும் நீதி
சூரபத்மன், தன்னைக்
வாரிஜாக்ஷா கலை பயின்ற

தமிழ்நாடு ... காப்பக நூலகம்

நாராயண சாமி நாதா
ஞான ரூபா சத்தி வேதா
பேரானந்தா கார்க்கோ ஞாதா
பேதை எந்தன் அருட்பிர சாதா வே

## 9. தரு.

(என்னடி நான்பெற்ற)

வர்ண மயின் மீதி லேறி
வருவாய் கோரி
குருவே மீறி
வரந்தரு வாய் ஞான வாரி
வன மாலியின் மருகா பதி
எனையா தரி முருகா தெரி
வள்ளிகுஞ் சரியின் பாகா-வர்ன
புள்ளி மயிலேறும் மோகா வ

தேவர்க் கிடர் தீர்த்த நாதா
தெய்வ நீதா
சைவ மேதா-செழுந்
தேனே என் வரப்ர சாதா
தெள்ளமுதே திவ்ய மாயா
கள்ளி புத்ரா கார்த்தி கேயா
கர்த்தனே நீஎனக் கின்பந்தா-பரி
சுத்தனே வரமருள் ஸ்ரீகந்தா வ

கங்கா தரி சுகு மாரா
சுப வீரா
உப காரா
கௌரிபுத்ர சூரசம் மாரா
கார்த்தி கேயா கதிர் வேலா
பார்வதி சுதா சு சீலா
பரம் பொருளே அம ரேசா-நல்
வர மருளே கும ரேசா வ

கந்தா கடம்பா வி ளுளா
கன்னிம ளுளா
கார்கு ளுளா
காருண்ய சுந்தர வேளா
காரும் எனை தீரும் வினை
பாரும் அருள் தாரும் இனி
பசுபதி புத்ரனே காரும்-மதி
சசியணி தேவா கண் பாரும் வ

கமலாக்ஷி கௌரிவி சாலா
கதிர் வேலா
உதிர் சூலா-என்னை
காத்தருள்வாய் சிவ பாலா
சகஞதியர் கருணகரா
சுகமாக்கிடு ஜெகமோகஞ
சுப்ரதீபா ஞான தேசிகா
ஒப்பி லானேசிவ ஷண்முகா வ

நாரா யண சாமி நாதா
நளின வேதா
ஒளியுந் தாதா
நண்புட னெனைக் காரும் நீதா
ஞானமருள் தேசிகனே
மோனகுரு சிவ மகனே
மொழிக்கா தாரா கவலை தீரும்
தழைக்கவே நல்லருள் தாரும் வ

## 10. தரு.

(நாதவிந்து களாதி)

சச்சிதா னந்த சொருபா நமோநம
இச்சையுட னென்னை யாளும் நமோநம
பச்சைமயி லேறி வாரும் நமோநம குமரேசா

தத்துவ மோன விநேயா நமோநம
நித்திய தேவ குஞளா நமோநம
சுத்தமெய் ஞான விசாகா நமோநம அமரேசா

நிர்மல சுந்தர தேவா நமோநம
தர்ம குணாளா விசித்ரா நமோநம
சிற்பரனே சுக வாரி நமோநம ஜெகதீசா

சுந்தர நாராயண சாமி நமோநம
கந்தனே காத்தருள் வேலா நமோநம
மைந்தனை யாண்டிடும் பாலா நமோநம பவநாசா

## 11. தரு.

(வல்லபையாள் கணநாதா)

எந்தனுக் கருள்வாய் கந்த நாதா இந்த
மைந்தனைக் காத்திடு மலர்ப் பாதா எ
பந்தபாசந் தீரும் மலர் பாதா ஞான
கந்தநாதா வரமருள் வரய் நீதா எ
வள்ளி குஞ்சரி மகிழும் போதா வர்ண
புள்ளிமயி லேறி யருள் வேதா எ
சூரபத்ம னாதி யர்வி னோதா சிவ
தாரக சொரூபனே அத் வீதா எ
மாங்கனிக்காய் வலம் வந்த கீதா இங்கு
ஏங்கிடும் மைந்தன் வரப்ர சாதா எ
ஆறுமுக மான தெய்வம் நீதா மன
மாறிடாமல் வாரும் பிரக் யாதா எ
சரவண பவ சிவவி னோதா முன்
கரங்குவித்தேன் காரும் மது சூதா எ
நாராயண சாமி குக நாதா வினை
தீராயினி என்மே லின்னம் வாதா எ

## 12. தரு.

(மஞ்சுகிகர் குந்தள)

கந்தநாதா மைந்தனை நீயே
காரும் எனையே
தீரும் வினையே
கார்த்திகேயா பார்த்தருள் முனையே

காமி சங்கரி கங்கை தற்பரி
நேமி யந்தரி நெடுமால் சுந்தரி

நேயர்போற்று மாயவா நமோ
நெடுமால் மருகா
வடிவேல் முருகா
நின்றேன் தயங்கி நிகில ரூபனே
நீலமாமயில் மேலேறி நீயே
கோலமாகவே வேலா வருவாயே

கொன்றை சூடிய குணபதி பாலா
கொற்றவ னீதா
நற்றவ வேதா
கோரிநின்றேன் காரும் வேலவா
கோவே ஞானமே தாவே மோனமே
நீவரந் தந்து பூவே யாதரி

நினைத்த வரங் கொடுக்கும் காருண்யா
நிர்மல தேவா
தற்பர னேவா
சரவண பவ குகனே காருமே
தனயன் வந்தனம் தந்தேன் காருமே
என்னையாள் தேசிக மணியே பாருமே

ஏக ரூப மான தெய்வமே
இகபர நாதா
சுகமது தாதா
சுந்தர சைதன்ய ஷண்முகா
சுகிர்தகந்தனே சுகுணமைந்தனே
மகிழும்பந்தனே ஜெகதரந்தனே

மரகத மயி லேறி என் முன்னே
வந்திடு வாயே
கந்தனே நீயே
காருண்ய நாராயண சாமி

கலக்கந் தீர்த்துமே கருணை வைத்திடு
நிலைக்கவே செல்வம் நீசிர் மித்திடு
நீலமயில் மீதிலேறியே
பாலகன்முன் வருவாய் கோறியே

13. தரு.

(அம்பிகா உன்பகன்)

ஷணமுகா சஞ்சலந் தீரும்
கண்மணி யுன்னருள் தாரும் ஷ

புண்ணாகி நான் மெலிந்து
குண்ணுறேன் மிக நலிந்து
மண்மிசையில் அலைந்து
மாறி வேருய் யாதினேன் தேறு ஷ

சரவண பவா சிவனே
சைதன்ய மான வனே
சுரர்துயர் தீர்த்த வனே
சூர பத்ம வீர தீரனே ஷ

மயூர மீதி லேறி
வரு குவா என்னைக் கோரி
தியா னித்தேன் மனமு மாறி
தீன நாதா மோன ரூபனே ஷ

வேட ரூப தார கனே
வேலவா அறு முகனே
நாடி னேனே தேசிகனே
நாதா வேதா யாதரி போதா ஷ

வள்ளி குஞ்சரி மணாளா
மைந்தனைக் காரும் வேளா
துள்ளியே வா தயாளா
தூயா நேயா சேயன் சகாயா ஷ

நாராயண சாமி துதி
ஞானரூபா பாதங் கதி
வாராய் திருத் தணிகைப் பதி
வந்தனமே தந்திட்டேன் வேலா ஷ

## 14. தரு.

(ஆண்டி பண்டாரம்)

| | | |
|---|---|---|
| வேண்டி வந்தேனே | எனை | |
| ஆண்டருள் கோனே | முருகா | வே |
| தாண்டவ | மாமணியே | |
| தற்பரா | தீர் பிணியே | |
| தீண்டாத் திரு | மேனியே | |
| தினமுந் தொழு தேன் | மெய்ஞானியே | வே |
| தீரா வினை | தீர்க்கும் மாயா | |
| தீன தயா | ளா சகாயா | |
| சூராதி சூரர் | நேயா | |
| தூரத்திக் கொன்ற | கார்த்தி கேயா | வே |
| மனக் குறை | தீர்ப்பவனே | |
| மைந்தனைக் | காப்பவனே | |
| வினைதீரப் | பார்ப்பவனே | |
| விஸ்வ ரூபஞ் | சேர்ப்பவனே | வே |
| என்னைக் கார் | வடி வேலனே | |
| ஏகா சூரா | திரிசூலனே | |
| மூன்வினையைத் | தீர் பாலனே | |
| மூலாதரா | சுசீலனே | வே |
| ஜன்மந் தீர் | தேசிகனே | |
| கருணா கரா | குகனே | |
| துன்பந் தீர் | உமை மகனே | |
| துணைவந் தருள் | சுகனே | வே |
| சரவண பவா | னந்தனே | |
| சத்திபார் வதி | மைந்தனே | |
| கரங்குவித் தேன் | கந்தனே | |
| காத்தருள்வாய் குண | வந்தனே | வே |
| நாராயண சாமி | நாதா | |
| ஞானரூபா வரமே | தாதா | |

பேரானந்த மறை வேதா
பெருமானே காரும் பாதா
திருத்தணி வேலா எந்தன்
கருத்துணர் பாலா

## 15. தரு.

(கண்டேனானந்தம்)

வேலாயுதா வந்தனமே வெற்றி வே
வேணிதனையா போற்றினேனே
வேண்டிமலர் சாற்றினேனே வே

சரஹண பவசிவ குமரா
சடாக்ஷரா சிவ சமரா
புரிவளரும் பராபரா
புத்ரனைக் கார் நிராதரா வே

வேணிபாலா வள்ளிக் கன்று
வேங்கைமர மாக நின்று
தோணிடச் செய்தா யென்று
தோத்திரம் செய் தேனே நன்று வே

சூரர்கள் முறைக் கிரங்கி
சூரனைக் கொன்றாய் தங்கி
சரணமே புரிந் தேன் பொங்கி
தயங்குறே னும் மயங்கி வே

சத்துச் சித்தா னந்தா
சரவண பவா னந்தா
நித்திய நிர்மலி மைந்தா
நீவிரை வாய்வாரும் கந்தா வே

ஏழைக் கிரங்கியே நாதா
எனக்கருள் வாய்மறை வேதா
வாழிடச் செய்வாய் பாதா
வந்தனம் புரிந்தேன் போதா வே

ஆதியாகி நின்ற வனே
அரியநிலை வென்ற வனே
காதில்வேதப் புகன்ற வனே
கருணாகரா னன்ற வனே வே

நாராயண சாமி வேலா
நாளுங் காத்தருள் சீலா
ஆருவமுதே சிவ பாலா
அடிபணிந்தேன் ஆதி மூலா வே

16 தரு.

(நான் சென்று கனிபறித்து)

வந்தனம் வேலா யுதனே
மங்களமாய் வாழ்வாயூர் ஜிதனே வ
மைந்தனும் பணிந்தே னற்பு தனே
மஹேஸ்வரிதேவி மகிழும் சுதனே வ

ஆதிமூலப் பொரு ளேவா
அடியேனை ரக்ஷிப்பாய் தேவா
நீதிநித்யா னந்தா வாவா
நித்தமும் உனதருள் தாவா வ

நாராயண சாமி நாதா
ஞான சொரூபாவி னோதா
பாராயணம் செய்தே னீதா
பக்ஷம்வைத்து காரும் வேதா வ

திருத்தணிகை ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி

திருப்புகழ் காவடிச்சிந்து

முற்றிற்று.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனி திருத்தணிகை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருப்புகழ் காவடிச் சிந்து என்பதை உபாத்தியாயர் ப-ா-ா-ஸ்ரீ வித்வான் வேலூர் - நாராயணசாமிபிள்ளை அவர்களாலியற்றிய புஸ்தகத்தை நுங்கம் பாக்கம் - அரங்கநாத முதலியாராகிய நான் சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதர மானவர் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந் திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர்ட் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு:

நு. அரங்கநாத முதலியார்,
நெ. 10, சாமிபிள்ளை தெரு,
சூளை போஸ்டு, மதராஸ்.

183517
சென்னை-600 008

---


வெளியாய்விட்டது! அதி நூதனம்!

ஸ்ரீ கிருஷ்ணமாயை என்னும் திருப்புகழ் காவடிச்சிந்து (பயாஸ் கோப்பில்) காண்பதுபோலவே யமைந்தது. விலை அணு 2.

புதிய மோஸ்தர் இரவில் மணிபார்க்கும் ஜெண்டில்மேன் அண்டு

லேடீஸ் எக்ஸ்பாண்டிங் பிராஸ்லெட்

# ரேடியம் ரிஸ்ட்லெட் வாட்சுகள்.



இரவில் மணிபார்க்க இக்கெடியாரங்கட்கு விளக்கு முதலிய வேறு வெளிச்சம் தேவை இல்லை. இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நெம்பர்களிலும் முட்களிலும் சேர்த்திருப்பதால் இரவில் இதன் நெம்பர்களும் முள்ளுகளும் நட்சத்திரம்போல் பிரகாசிக்கும். இருட்டு எவ்வளவு கருக்கலா யிருக்குமோ அவ்வளவிற்கும் எண்கள் நன்றாய்த் தெரியும். இவைகள் சரியான டைம் காட்டக்கூடியவைகள் இதனுடன் அமைக்கப்பட்டிருக்கும் பிராஸ்லெட் செயின் ஆனவை ஒவ்வொரு மணிக்கட்டுக்கும் பிடிக்குமாறு நிகளவும், குறுகவும் ஓர்வித வில் இசையை அமைத்திருப்பதால் இவைகளை எல்லோருக்கும் உபயோகப்படும்.

ரவுண்டு நிக்கல்ரேடியம் ரிஸ்ட்லெட் கெடியாரம் நிக்கல் ஸ்பிரிங்கு
செயின் பட்டையுடன் ரூபா 7 0 0
4-மூலை ,, ,, ,, ரூபா 8 0 0
8-மூலை ,, ,, ,, ரூபா 8 0 0
ஷை ரகங்களில் பொன்கிலிட்டு ரேடியம் ரிஸ்ட்லெட் கெடியாரம்,
பொன்கிலீட்டு ஸ்பிரிங்கு செயின் பட்டையுடன் ரூபா 10 0 0

## இரவில் மணிபார்க்கும்

## பாக்கெட் லீவர் ரேடியம் கெடியாரம்.



புதிதாய் வரவழைக்கப்பட்ட இச்சிறந்த கெடியாரங்கள் பெரியதாய் இராமலும் உறுதியாக செய்யப்பட்டதும் சரியான காலத்தைக் காட்டக்கூடியதுமல்லாமல் இதன் எண்களிலும் முள்ளுகளிலும் ரேடியம் என்னும் உலோகம் அமைக்கப்பட்டிருக்கிறதினால் எவ்வளவு இருளிலும் விளக்கின் வெளிச்சமில்லாமலே இதன் பிரகாசத்தினால் நேரத்தை தெரிந்துக் கொள்ளலாம்.

நெ. 1 பாக்கெட் ரேடியம் கெடியாரம்
விலை ரூபா 7 0 0
நெ. 2 விநுடிமுள்போட்ட ஒஸ்தி பாக்கெட் லீவர்
ரேடியம் கெடியாரம் கருப்பு டயல் ரூ 10 0 0

## ரயில்வே ரெகுலேடர் கெடியாரம்.

இந்தக் கெடியாரம் வெகு அழகானதும், உறுதியானதும் என்றும் கெடாமல் நெடுநாளைக்கு பிரயோஜனத்தை தரக்கூடிய உயர்ந்த கெடியாரம்.

நெ. 1 ரயில்வேகெடியாரம் 1-க்கு விலை ரூபா 5 0 0
நெ. 2 ராஸ்கோப் கெடியாரம் ,, 4 8 0

## கையில்கட்டும் லேடீஸ் கெடியாரம்.

முன்பக்கம் கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் தலைசாவி யுள்ளதும் கையில் பெண்களும் புருஷர்களும் கட்டி உபயோகிக்கும்படியான நிக்கல் வெள்ளியில்செய்தது, இதை இஷ்டமானபோது கையில் கட்டி[illegible]ளலாம். நெ. 1. நிக்கல் வெள்ளி லேடிஸ் கெடியாரம் தோல்பட்டை

விலை ரூபா 7 0 0

நெ. 2. மேல்கண்டமாதிரி அசல் சொக்கவெள்ளி லேடிஸ் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை ரூபா 9 8 0

கிரௌவுன் அண்டு கோ.,

சூளை. போஸ்ட் மதராஸ்.

## ஆனந்தலக்ஷ்மி கூந்தல்வளரும் பரிமளத் தைலம்.



அதிக பரிமளமுடைய இத்தைலத்தில் கொஞ்சமெடுத்து தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டுவந்தால், மயிரானது செழிப்பாகவும் அழகாகவும் செய்து ஆலம்விழுதுபோல ஓங்கி வளரும் மயிர்க்கால்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்து சிவந்தநிறத்தை மாற்றி நாகப்பழம்போன்ற கருநிறத்தை யுண்டுபண்ணும் சுண்டு. மயிர்வெடிப்பு, மயக்கம் தலைசுழற்றல், தேகத்திலுள்ள சொரிசிரங்கு வியர்வை நாற்றம் கற்றாழை நாற்றம், மணச்சஞ்சலம் ஞாபகமறதி முதலிய வியாதிகளைக்கண்டித்து, கண்ணுக்கு மிக்க குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் சுகந்த பரிமள வாசனையையும்தேகத்திற்கு மினுமினுப்பையுந் தந்து முகத்தில் நல்ல காந்தியைக்கொடுக்கும்இத்தைலம் அனேக பிரபுக்களால் நன்கு மதிக்கப்பட்டு சர்ட்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கின்றது.

ஆழாக்கு எண்ணை கொண்ட டப்பி ஒயிட்ரோஸ் 0 12 0

வி. பி. தபால் சார்ஜ் அணா 0 6 0 புஷ்பகாந்தா 1 0 0

## ஐந்தே நிமிஷத்தில் நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாய்ச்செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்திவிடுகின்றன. நம்முடைய தைலமோ நரைத்தமயிருக்குப்பூசிய 2-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமைநிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும் மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது இதைப் பூசியபிறகு சுலட்சணமும் முகவசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை இதைப்போன்ற தைலம் வேறெங்கும் கிடையாது வேறு எவ்விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. புட்டி 1-க்கு ரூபா 1

## சர்வபடைகள் சங்காரன்.

மேற்படி மருந்தை மேலுக்கு தடவிவர சூரியனைக்கண்ட பனிபோல் படை நீங்கிவிடும் இம்மருந்து வாயிற்படக்கூடாது.

1-அவுன்ஸ் புட்டி ரூபா 1 0 0

ஸ்ரீ ஆனந்தலக்ஷ்மி அண்டு கோ.,

கோவிந்தப்ப நாய்க்கன் வீதி.

சவுகார்பேட் மதராஸ்.

9B
3-36